"நீதி மன்றங்களின் சுதந்திரம் பறிக்கப்படுகிறது"

Phone No 4502
விலை அரை அணா
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.
MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (10—4—50) வெளியூர் (11—4—50) [இதழ் 220

ஆட்சியாளர் ஆதிக்கவெறி அதிகமாகிவிட்டது

மக்களாட்சியில் மக்களுக்குப் பாதுகாப்பு எங்கே?

மைசூர் வழக்கறிஞர் மாநாட்டில் கண்டனம்

ஷிமோகா, ஏப். 8—

"நீதிமன்றங்கள் சுயேச்சையுடன் வேலை செய்வதற்கு அரசியலார் பெரிதும் தடையாக இருக்கிறார்கள். நீதி நிர்வாக இலாகாக்களைப் பிரித்துவிடுவதில் பெருமுயற்சி எடுத்துக்கொள்வதாக இரண்டாண்டுகளுக்கு முன் சட்ட மந்திரி கூறியும் இதுவரை வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. சட்டமந்திரியும், அவருடைய சகாக்களும் இப்பொழுது நேர்மாறாக நடந்துகொள்கிறார்கள்" என்று மைசூர் சமஸ்தான வக்கீல்கள் மாநாட்டில் தோழர் என். லட்சுமிநாராயணப்பா அறிவித்தார்.

"புதிய மந்திரிசபை பதவிக்கு வந்தபின் இரண்டு நீதிபதிகள் அப்புறப்படுத்தப்பட்டார்கள். 1948ம் ஆண்டின் இறுதியில் மைசூர் உயர் நீதி மன்றத்தின் முதல் நீதிபதி பதவிகாலம் முடிவதற்கு முன்பே வேலையை விட்டு நீங்கும்படி வற்புறுத்தப்பட்டார். ஒரு சமஸ்தானத்துக்கு இரண்டு உயர்நீதி மன்றங்கள் தேவை இல்லையென்று அவர் கூறியதால், அரசாங்கம் அவருக்கு இத்தண்டனை கொடுத்தது என்றுதான் பொதுமக்கள் கருதுகிறார்கள். மற்றொரு நீதிப[illegible] தின்[illegible] கொடுக்கப்படவில்லை. என்றாலும் நீதிபதி ஆட்சியாளர் கொண்ட கருத்துக்கு மாறான எண்ணம் கொண்டிருந்தார் என்றுதான் கருதப்படுகிறது" என்று தோழர் லட்சுமி நாராயணப்பா அறிவித்தார்.

மற்றும் கோபால்ராவ் விசாரணை கமிட்டி ஏற்படுத்தியதிலும் நீதி மன்றத்துக்கும், அரசாங்கத்துக்கும் வேறுபாடு ஏற்பட்டிருந்ததென்று அவர் கூறினார். நீதி இலாகாவுக்கும், நிர்வாகத்துக்கும் வேறுபாடு ஏற்பட்டால் நாட்டுக்கே பெரும் அபத்தென்று அவர் குறிப்பிட்டார்.

அரசியல் தொடர்பு காரணமாக வக்கீல்கள் தங்கள் உரிமைகளைப்பற்றிக் கூடப் பெரிதும் கவலைப்படாமல், மந்தமாக இருக்கிறார்களென்று அவர் வருத்தத்துடன் குறிப்பிட்டார்.

நீதி மன்றங்களில் வாதிடும்போது, வக்கீல்கள் தங்கள் உண்மையென்று கருதுபவற்றைத் தைரியமாக எடுத்துக்கூற வேண்டுமென்றும், அப்படிச் செய்தால் வழக்குத் தோல்வியடைந்தால் கூடக் கட்சிக்காரர் மனம் தளரமாட்டாரென்றும் அவர் கூறினார்

உயர்நீதி மன்ற அதிகாரங்கள் பறிபோயின

மாநாட்டு வரவேற்பு கமிட்டித் தலைவர் தோழர் ராகவையா பேசுகையில், சமீபகாலத்தில் உப நீதி மன்றங்களின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு நிர்வாக மந்திரிகளுக்கும் டெபுடி கமிஷனர்களுக்கும் கோர்ட்டுகளுக்கு கொடுக்கப்பட்டனவென்று அறிவித்தார். இதனால் நீதி மன்றத்துக்கும், மந்திரி சபைக்குமிடையே நெருக்கடியான நிலை ஏற்பட்டதென்றும், உயர் நீதி மன்றம் விட்டுக்கொடுக்க மறுத்தால் மந்திரி சபை புதிய சட்டங்களையெல்லாம் அவசரமாகக் கொண்டுவந்து பிரதான நீதிபதியைப் பதவியை விட்டு விலகும்படி செய்ததென்றும் தோழர் ராகவையா அறிவித்தார். பல வக்கீல் சங்கங்களும், பொதுமக்களும் அரசாங்கத்தின் இச்செய்கையை எதிர்த்தும் ஆட்சியாளர் அசைந்து கொடுக்கவில்லையென்று அவர் தெரிவித்தார்.

நியாயம் பெற நீதிபதிகளை மக்கள் நம்பியிருக்கும் இந்த நேரத்தில், நீதிபதிகள் கண்டபடி அரசாங்கத்தால் நடத்தப்படுவதைத் தடுக்க வக்கீல்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது மிக அவசியமென்று அவர் அறிவித்தார்.

"பொறுப்பாட்சி நிறுவப்பட்டபின், நீதிமன்றங்களின் மதிப்பு உயருமென்று மக்கள் கருதினார்கள். ஆனால் சென்ற இரண்டாண்டுகளாகப் பெற்ற அனுபவம் அதை அப்படியே மாற்றிவிட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தால் தக்கப்படி நடத்தப்பட்ட நீதிமன்றங்களின் மதிப்பு காப்பாற்றப்படாவிட்டால், நிலைமை மிகவும் மோசமாகிவிடுமென்று நான் கருதுகிறேன்" என்று அவர் கூறினார்.

அரசியலிலும், சட்டசபையிலும் பங்கெடுத்துக்கொள்ளும் சட்டவிரி உரையாளர்கள் உடனே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுவது மிக அவசியமென்றும், அவ்வாறு செய்யாவிட்டால் சுயேச்சை பயனற்றதாகிவிடுமென்றும் தோழர் ராகவையா அறிவித்தார்.

அமெரிக்க ஆயுத உதவி தடுக்கப்படும்

பாரிஸ், எப். 9—

அமெரிக்க ஆயுத உதவி ஐரோப்பாவுக்கும், தென்கிழக்கு ஆசியாவுக்கும் வருவதைத் தடுக்க மூஸ்கோ [illegible] ஒரே சமயத்தில் பிரிட்டனிலும் பிரான்ஸிலும் [illegible] கம்யூனிஸ்டுகள் முஸ்தீபு செய்திருக்கிறார்கள் என்ற தகவல் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குக் கிடைத்திருக்கிறது.

ஹோ-சி-மின் முழு மூச்சுத் தாக்குதல் ஆரம்பிப்பார்

மா-சே-துங்கைச் சந்தித்ததின் விளைவா?

பாங்காக், ஏப். 9—

பிரெஞ்சு, பாவ்டை, படைகள் மீது வியட்னாம் படைகள் முழுமூச்சு தாக்குதலில் சீக்கிரமே ஈடுபடவிருக்கிறதென்று அமெரிக்க வியட்னாமிய காரியாலய டைரக்டர் என். டக்கய் இன்று குளோப் நிருபரிடம் கூறினர்.

அவர் மேலும் வெளியிட்ட தகவல்களாவன:— வியட்னாமியர்களிடம் 50 லக்ஷம் கொரில்லாப் படை[illegible] தயாராக இருக்கின்[illegible] லக்ஷம் பேர் கொண்[illegible] வரிசை இதைக் தவிர அதிகமாக இருக்கிறது.

எங்களிடம் டாங்கிகள், விமானங்கள் இல்லை என்றாலும் நவீன தளவாடங்களும் சக்தி வாய்ந்த பீரங்கிகளும் இருக்கின்றன. இவைகளில் பல, பிரெஞ்சுகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகும்.

அத்துடன் மட்டுமின்றி கைக்குண்டுகள், ராக்கெட்டுகள் முதலியவைகளையும் வியட்னாமியர் திறமையுடன் செய்துவருகின்றனர்".

இவ்வளவுக்கும் போதிய பயிற்சி எங்கிருந்து வியட்னாமியர்களுக்குக் கிடைத்ததென்பதை அவர் சொல்ல மறந்துவிட்டார்.

கைத் தொழில் வளருகிறது காணீர்!

லண்டன், ஏப். 9—

மஞ்சூரியாவிலும், சிங்கியாங்கிலும் கைத் தொழில்களை அபிவிருத்தி செய்ய செஞ்சீனா தனி சிரத்தை காட்டும் என்று யுனைடெட் ஸ்டேட்ஸுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

சீனாவின் கைத்தொழில் [illegible]ன் எல்லையருகில் பெறுவது [illegible]ஷ்யாவுக்கு மிகவும் அனுகூலமாகும் என்று மாஞ்செஸ்டர் கார்டியன் கூறுகிறது.

கசையடி தண்டனை அவசியமா?

லண்டன் ஏப். 9—

சில பெரும் குற்றங்களை ஒழிக்க கசையடி தண்டனை கொடுக்கும் அதிகாரம் அவசியம் என்று பிரிட்டிஷ் நீதிபதிகள் சிலர் அபிப்பிராயம் தெரிவித்ததின்பேரில், பிரிட்டிஷ் சர்க்கார் இவ்விஷயமாக இதர ஐரோப்பிய நாடுகளின் கருத்து என்னவென்று ஆலோசனை கேட்டிருக்கிறது.

பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து இம் மூன்று நாடுகளும் கசையடி தண்டனையை ஒழித்துவிட்டன. அந்நாடுகளில் குற்றங்கள் எவ்வளவுதூரம் செய்யப்படுகிறதென்பதை அறிந்து தெரிவிக்கும்படி அந்நாடுகளிலுள்ள தன் ஸ்தானீகர்களைப் பிரிட்டன் கேட்டிருக்கிறது.

இத்தகவல்கள் கிடைத்து பரிசீலனை முடிந்த பின், பிரிட்டிஷ் உள் நாட்டிலாகா தன் சிபார்சுகளை பிரிட்டிஷ் மந்திரிசபைக்குத் தெரிவிப்பதோம் —குளோப்

ஆச்சரியமான ஆபரேஷன்

—(0)—

இறந்தவரின் இரத்தக் குழாயை எடுத்து பொருத்த ஏற்பாடு

லண்டன், ஏப். 9—

இறந்துபோன ஒருவரின் (இருதயத்திற்கு ரத்தம சப்ளை செய்யும்) ரத்தக் குழாயை எடுத்து நோயுற்றுள்ளவருக்கு பொருத்தி ஆப்ரேஷன் செய்வது லண்டன் கை (Guy) ஆஸ்பத்திரியில் நடைபெறவிருக்கிறது.

இதே மாதிரி ஆபரேஷன் அமெரிக்காவில் பெட்வியடிலுள்ள ஹென்ரி போர்டு ஆஸ்பத்திரியில் வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளது. ஒருவர் இறந்து 5 நாட்கள் ஆகுமுன் அவரின் உடம்பிலிருந்து எடுக்கப்பட்ட ரத்தக்குழாய் ஒரு நோயாளியின் இருதயத்துடன் பொருத்தப்பட்டு ஆபரேஷன் செய்யப்பட்டது.

இம்மாதிரி ஸ்பேர்பார்ட்டுகள் விபத்துக்குள்ளாகி மாண்டவர்களின் உடலிலிருந்து எடுக்கப்பட வேண்டுமாம்.

பெவின் பதவியிலிருந்து விலகமாட்டார்

லண்டன், ஏப். 9—

பிரிட்டிஷ் அயல் நாட்டிலாகா மந்திரி பெவின் முழு சுகத்துடனேயே இருக்கிறார் என்றும், பதவியிலிருந்து விலகிக்கொள்ளும்படி அவருக்கு நோய்நொடி எதுவும் இல்லை என்று பிரிட்டிஷ் அயல்நாட்டிலாகா அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

அயல் நாட்டிலாகா பதவி வேறு ஒருவருக்கு மாறும் என்ற வதந்திகள் கொழும்புவில் நடைபெற்ற காமன்வெல்த் மாநாடு முதற் கொண்டே இருந்து வருகின்றன. இப்பொழுது இவ்வதந்திகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. (குளோப்)

இதைக் கேட்கக் கூடாதா?

ஐ. நா.-விடம் சியாங் சர்க்கார் முறையீடு

ஹாங்ஹாங், ஏப். 9—

செஞ்சீனாவுக்கு ரஷ்யர்கள் உதவி செய்துவருவது திட்டமாகத் தெரிய வருகிறதென்றும், இதைப்பற்றி அறிய ஐ. நா. மேற்பார்வையாளரை சீனாவுக்கு அனுப்பவேண்டும் என்று, சீன தேசிய சர்க்கார் கேட்டுக்கொள்ளும் என்றும் சியாங்கேஷேக் சர்க்கார் அயல் நாட்டு மந்திரி அறிவித்திருக்கிறார்.

சீன ரஷ்ய உடன்படிக்கையில் ரஷ்யா உதவி அளிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்றும், பஞ்ச கடலில் ரஷ்ய சப்மரீன் காணப்பட்டதற்கு அதுவே காரணமாக இருக்கலாம் என்றும் சீன தேசிய வட்டாரங்களில் கூறப்படுகிறது.

அரிசி விளையும் பிரதேசம் பிரஞ்சு வசம்

லண்டன், ஏப். 9

இந்தோசீனாவில் ஏராளமாக அரிசி விளையும் பிரதேசம் பிரெஞ்சு வசமாகிவிட்டது என்றும், ஏராள அரிசி சப்ளை கிடைக்கப்பெற்ற கம்யூனிஸத்தை எதிர்க்கத் தக்க தொரு சாதனம் என்றும், 'ஸ்காட்ஸ்மன்' பத்திரிகை எழுதுகிறது.

ஷேக்ஸ்பியர் நாடகங்கள் கார்ட்டூன்களாகப் பிரசுரம்

நியூயார்க், ஏப். 9—

பிரபல பிரிட்டிஷ் நாடகாசிரியர் வில்லியம் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் கார்ட்டூன் படங்களினாலேயே விளக்கப்பட்ட புத்தகமாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இப் புத்தகங்களை அமெரிக்கர்கள் ஏராளமாக வாங்கி களிக்கிறார்களாம்,

மாலை மணி

சென்னை 10—4—50 திங்கட்கிழமை

அவசியமான அறிவுரை

"ஜனநாயக ஆட்சி என்ருல் திறமையும், தரமும் குறைய வேண்டும் என்பது அவசியமில்லை. நிர்வாகத்திலும், மற்றத் துறைகளிலும் திறமை இல்லாவிடில் ஜனநாயகம் வெற்றி அடையாது. அத்தகைய திறமையையும், ஒழுக்கத்தையும் மாணவர்களுக்கு ஊட்ட வேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பு"

இது ஆசிரியர் கல்லூரி தலைவர் தோழர் வி. ஆர். அரங்கநாத முதலியார் அவர்கள், அண்மையில் சென்னையில் நடைபெற்ற ஆசிரியர் கழக ஆண்டு விழாவிற்குத் தலைவர் என்ற முறையில் வெளியிட்டுள்ள கருத்தாகும்.

அந்நியரை நாட்டை விட்டு விரட்டும் ஆர்வத்தில், நம் நாட்டவர் அந்த அந்நியரோடு, நம்மவர்க்கு இருக்க வேண்டிய இன்றியமையாப் பண்பாடுகள் சிலவற்றையும் சேர்த்து விரட்டி விட்டனர் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது!

வெள்ளையனை வெளியேற்றிய வீரர்கள், அவனோடு ஆங்கில மொழியையும் விரட்டி விட வேண்டும் என எண்ணி, அங்ஙனமே செய்தும் வருகின்றனர். ஆங்கில மொழி கூட ஆகாது என்பது இவர்களுடைய சுதந்திர அகராதியில் காணப்படும் பொருள் போலும்! இங்ஙனமே இன்னும் பல துறைகளில், சுதந்திரம் என்ற பெயரில், ஒழுங்கு கட்டுப்பாடு, ஜனநாயகம் முதலியனவும் குறைபாடப்பட்டு வருகின்றன.

இப்படிப்பட்ட அலங்கோல நிலை, ஆட்சியாளர் கூடும் சட்ட மன்றங்கள் முதற்கொண்டு, சாதாரண பள்ளிக்கூடங்கள் வரை பரவி விட்டது ஒழுங்கு கட்டுப்பாடு, ஜனநாயக முறை இன்ன பிற இயல்புகள் காண்பதற்குரிய பொருள்களாகி விட்டன அவரவர் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

இந்நிலை ஏற்படக் காரணம் என்ன? அன்று வெள்ளையர் ஆட்சி நடைபெற்றபோது ஆட்சியாளருக்கு எதிராக, ஏன் தலைப்போர் என்ற பெயரிலே செயற்பாலன யாவை, செய்யக் கூடாதவை எவை என்பனவற்றை மறந்து, சட்டங்களைத் துச்சமென மதித்து, இன்று ஆட்சிப்பீடத்திலுள்ளோரே ஆர்ப்பாட்டம் செய்தனர். அன்று மாணவர் உலகையும் தங்களுடைய ஆர்ப்பாட்டத்துக்கு உறுதுணையாக்கிக் கொண்டனர் அதன் விளைவாகஜனநாயகம், கட்டுப்பாடு, ஒழுக்கம் முதலியன காற்றில் பறந்தன. யதேச்சாதிகாரமனப்பான்மையும், கட்டுப்பாடின்மையும் பொறுப்பற்றத் தன்மையும் வளரலாயிற்று, அந்த வளர்ச்சி தான் இன்றும் நீடித்து நிலவுகிறது.

இதைத்தான் ஆசிரியர் கல்லூரித்தலைவர் தோழர் அரங்கநாதர் அழகுற, சுருக்கமாக —ஆனால் சற்று ஜாடையாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

'ஜனநாயக ஆட்சி என்ருல் திறமையும், தரமும் குறைய வேண்டும் என்பது அவசியமல்ல' என்கிருர் அவர். அதாவது முன்றிருந்த திறமையும் தகுதியும் இன்றில்லை என்பதைச் சொல்லாமல் சொல்லுகிருர்.

இங்ஙனம் திறமையும், தரமும் குறையக் காரணங்கள் பல இருப்பினும், ஆங்கில மொழியை ஆட்சியாளர் அலட்சியப்படுத்தி வருவது முக்கிய மானதோர் காரணமாகும். அதிலும் சிறப்பாக, கல்வித் துறையில் ஆங்கிலம் புறக்கணிக்கப்பட்ட நாள் முதல் மாணவரின் தரமும் குறைய ஆரம்பித்துவிட்டது கண்கூடு. சுமார் 10 ஆண்டுகட்கு முன்னிருந்த தகுதி, திறமை முதலியன இன்றில்லை. அதிலும் நாடு சுதந்திரம் பெற்று ஆங்கிலம் இருந்த இடத்தை இந்தி மொழி ஆக்கிரமிக்க ஆரம்பித்த பின், நிலைமை மிக மிக மோசமாகிவிட்டது.

இங்ஙனம் திறமை குறைதல் கட்டுப்பாடுகள் நீங்குதல், ஒழுக்கம் கெடுதல் முதலியனவே சுதந்திர ஆட்சியின் இலக்கணங்கள் என்றுநினைக்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. இது மிக மிக வருந்தத்தக்க நிலை. அதுமட்டுமல்ல, மாற வேண்டிய — மாற்றப்பட வேண்டிய நிலையுங்கூட.

எனவே, தோழர் அரங்கநாதர் தந்துள்ள அறிவுரைகள் ஆசிரியர் உலகிற்கு மட்டுமேயன்றி, மற்றத் துறைகளுக்கும் பொருந்துவதொன்ருகும்.

ஒழுக்கம் கட்டுப்பாடு, ஜனநாயகம் முதலியன நன்கு வளர்க்கப்படவேண்டிய இடங்கள் பள்ளிக்கூடங்களே. வளர்க்கும் பணியை மேற்கொள்ளவேண்டியவர்கள் பள்ளியாசிரியர்களே ஆகவேதான் ஆசிரியர்களிடையே இந்த இன்றியமையாத அறிவுரையை வழங்கியுள்ளார் தோழர் அரங்கநாதர், ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர் என்ற முறையிலே.

பயனுள்ள அறிவுரையை, பக்குவமாக இடமும் காலமும் அறிந்து வழங்கிய அரங்கநாதரைப் பாராட்டுகிருேம். அரங்கநாதரின் இந்த அறிவுரை ஆசிரியர் கழகத்தோடு மட்டுமே நின்று விடுதல் கூடாது. ஆசிரியர்களும் இவ் வறிவுரைக்கேற்றபடி நடந்து, பள்ளி மாணவர்களிடையே நல்ல பண்பாடுகள் வளரவழி கோலவேண்டும். இது மிக மிக அவசியமும், அவசரமுமான பணியாகும். இப்பணியை ஆசிரியர்கள் மேற்கொள்ளாவிடில், மாணவர் உலகில் இடைக்காலத்தில் தோன்றியுள்ள மாசுகள் துடைக்கப்படமாட்டா. அவை தொடர்ந்து இருந்துகொண்டேயிருக்கும். அந்நிலை கூடாத நிலை. எனவே அரங்கநாதர் தந்த அறிவுரையை ஏற்று ஆசிரியர் உலகும், மாணவர் உலகும் பண்பும், பயனுமுடையதாக விளங்குமெனறு நம்புகிருேம். சுருங்கச் சொல்ல வேண்டுமானல் அரங்கநாதரின் அறிவுரை ஓர் அவசியமான அறிவுரை என்றே கொள்ளவேண்டும்.

ஆபத்து அதிகரிக்கிறது

லண்டன், ஏப். 9—

வியட்நாம் நிலைமை ஆபத்தாகிக்கொண்டே வந்தாலும், பிரெஞ்சு பாவ்டை சர்க்கார்கள் பொருளாதாரத் துறையில் அங்கு நிலைமை திருப்திகாமான அளவுக்கு அபிவிருத்தியடைந்து வருவதாகக் கருதுகின்றனர் என்று 'ஸ்காட்ஸ்மன்' பத்திரிகை கூறுகிறது.

மந்திரி வேலை ஆபத்தானது!

லண்டன், ஏப். 9—

இரும்பு திரை நாடுகளில்—முக்கியமாக யுகோஸ்லேவியா, ஆல்பேனியாவில் கைத்தொழில் மந்திரியாக வேலை பார்ப்பது உலகிலேயே, மிகவும் ஆபத்தான வேலை என்று 'சிமூவார்ச் ஹொரால்ட் டிரிபூனின்' டெல்கிரேட் நிருபர் காஸ்டன் காப்பென்ட்ஸ் கூறுகிறர்.

இதுவரை இப்பதவி வகித்தவர்கள் சிறைக்குச் சென்றிருக்கின்றனர். அல்லது தூக்கு போட்டுக் கொண்டிருக்கின்றனர் என்று அவர் கூறுகிறர்.

சர்க்கார் தானிய கிடங்கில் திருட்டு?

கிடங்கு குமஸ்தா கைது

சென்னை, ஏப். 7—

பேஸின் பிரிட்ஜிலுள்ள சர்க்கார் தானியக் கிடங்கு குமஸ்தாவான வரதராஜுலுவைப் போலிசார் கைது செய்திருக்கின்றனர்.

மேற்படி கிடங்கிலிருந்து 5 [illegible] சோளமூட்டைகளைத் திருட்டுத்தனமாக ஒரு வண்டியில் ஏற்றி, [illegible] பிலுள்ள ஒரு மில்லிற்கு எடுத்துச் செல்ல எத்தனித்தபோது பேஸின் பிரிட்ஜ் இன்ஸ்பெக்டர் பெருமாள் சாமுவேல் கிருஷ்ணனிடம் சோள மூட்டைகளைக் கைப்பற்றியதாகச் சொல்லப்படுகிறது.

கிடங்கு குமஸ்தாவைக் கைது செய்த விஷயம் சென்னை கலெக்டருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. போலிஸார் மேலும் புலன் விசாரணை செய்கின்றனர்.

ஐந்து மாணவர் கைது செய்யப்பட்டனர்

திருவனந்தபுரம், ஏப். 5—

இன்று மாலை இங்கு சட்டசபை முன்பு ஆர்ப்பாட்டம் செய்த ஆயுர்வேதக் கல்லூரி மாணவர்களில் 5 பேரைப் போலீஸார் கைது செய்தனர். திருவாங்கூர் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை ஏற்படுத்த வேண்டுமென்றும், ஆங்கில வைத்திய முறை 'டிப்ளோமா'வுக்குச் சமமாக ஆயுர்வேதப் படிப்பை ஏற்க வேண்டுமென்று கோரி இந்த மாணவர்கள் சிகிச்சைக்குச் செல்லாமல் பரீட்சையைப் புறக்கணித்து வருகின்றனர்.

தி. மு. க. தலைமை நிலைய கட்டட நிதி

—————(0)—————

	ரு. அ. பை
முன் வரவு	168—0—0
கே. கே. நீலமேகம், கும்பகோணம் (தி. மு. க. சார்பாக)	50—0—0
வி. முனுசாமி (சென்னைகார்பொரேஷன் கவுன்சிலர்)	45—0—0
மூத்தியாலுப்பேட்டை தி மு கழகம்	20—0—0
இராம. அரங்கண்ணல் ('திராவிடநாடு' காஞ்சிபுரம்)	10—0—0
	29[illegible]—0—0

கோவை மாவட்ட தி. மு. கழக செயற்குழுக் கூட்ட விவரம்

2—4—50 ஞாயிறு மாலை 3-மணிக்குக் கோவை நகர கழக கட்டிடத்தில் நடைபெற்ற மாவட்ட செயற்குழுக் கூட்டம் தோழர் பி. பழனிசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் கீழ்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன.

1. முதலில் ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

2 சங்கங்கள் செயற்குழு பிற புத்தகங்களின் அடிக்கட்டணை (மாவட்ட தலைமை) நிலையத்துக்கு இதுவரை அனுப்பாதிருக்கும் கிளை கழகங்கள் 5-4-50-தேதிக்குள் அனுப்பவேண்டும் படியும் மேற்படி தேதிக்குள் அனுப்பாதிருக்கும் கிளைக்கழகங்களுக்கு கண்டிப்பான முறையில் கடிதம் எழுதி பெறுவதென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது

3 கோவை மாவட்ட மாநாட்டின் (சனிபூ) வரவு செலவு கணக்குகளை பரிசீலனை செய்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

4. சனிபூ மாநாட்டு மீதமாக வந்த ரூ. 2337-3-9-ல் மத்தியக் கழகக் கட்டிட நிதிக்கு ரூபாய் 1000-0-0-ம் கொடுக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது

4 ஆ டி தொகையில் மீதி உள்ள ரூபாயிலிருந்து கோவையில் நடக்கப்போகும் நாடகச் செலவிற்கு எடுத்து செலவு செய்துவிட்டு நாடக வசூலிலிருந்து ஈடு செய்து கொள்வதென தீர்மானிக்கப்பட்டது'

5. 18—12—49 தேதியன்று மாவட்ட செயற்குழுவின் தீர்மானப்படி மத்திய தி. மு. கழகக் கட்டிட நிதிக்காக தோழர் சி. என். அண்ணாதுரை குழுவினரால் 13, 14-5-50-ந் தேதிகளில் கோவையில் நாடகம் நடத்துவதென்றும் அதற்கு முன் நியமித்த கமிட்டியே பொறுப்பேற்று நடத்துவதெனவும் அக்குழுவில் இன்னும் தேவையானவர்களைச் சேர்த்துக் கொள்ள அக் குழுவினருக்கு இக்கமிட்டி அதிகாரமளிக்கிறது.

6. கோவை நாடகங்கள் தவிர மாவட்டத்தின் மற்ற பகுதிகளில் இரண்டு நாடகங்கள் நடத்திக் கொடுக்கும்படி தலைமை கழகப் பொதுச் செயலாளர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

7 மாவட்ட அமைப்பு வளர்ச்சி கீழ்கண்டபடி பிரித்து, மாவட்டத்தின் பகுதிகளில் கழகப் பணியைச் செய்வதென இக்குழு தீர்மானிக்கிறது

I. என். இ. மாதுரு அவர்கள், ஈரோடு பழனி, தாராபுரம் தாலுகாக்களின் அமைப்பாளராகவும், தோழர் ஜி. எச். ராமசாமி, அவிநாசி, கொள்ளேகால் தாலுகா நீலகிரி ஜில்லாவும் தோழர் கே. சிவசாமி கோவை தாலுகாவிலும் தோழர் பி. என். இராமானுசம் எஸ். என். அற்புதசாமி (சூலூர்) இருவரையும் பொள்ளாச்சி, உடுமலை, பல்லடம் தாலுகாக்களின் அமைப்பாளர்களாகவும் மேட்டுப்பாளையம் தாலுகாவுக்குத் தோழர் வி. என். நாராயணசாமி அமைப்பாளராகவும் இருந்து கழகங்கள் இல்லாத இடங்களில் உள்ள முக்கிய தோழர்களைச் சந்தித்து அங்காங்கு கிளைக்கழகங்கள் ஏற்படுத்தி தலைமை கழகத்தைக் கேட்டு தெரிவிக்கவேண்டுமென இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

(8) மாவட்ட செயற்குழு அங்கத்தினர்கள் தொடர்ந்தாற்போல் மூன்று கூட்டங்களுக்கு வராதிருந்தால் அடுத்த கூட்டத்திலிருந்து அவர்கள் தங்கள் அங்கத்தினர் பதவியை இழந்து விடுவார்களென தீர்மானிக்கப்பட்டது.

வணக்கம்
சே. அ. ராசமாணிக்கம்
உதவிச் செயலாளர்

இனி நடப்பவை

கள்ளக்குறிச்சி:— இவ்வூர் திராவிட மன்றத்தின் சார்பில், இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரிப்புத் தீர்மானமும், அறிஞர் அண்ணாவுடன் கொண்டாடுதல்பற்றியும் தோழர் அன்னூர்துரை இங்கு வருவதுபற்றியும் யோசிக்க வேண்டியிருப்பதாலும், 11-4-50-ல் மாலை 5 மணிக்கு, பாண்டியன் சித்தாண்டி நிலையத்தில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

—————

லண்டன், ஏப். 9—

ஜினிவாவில் ஐ. நா. தர்மகர்த்தா கௌன்ஸில் பாலஸ்தீன சமாலக் கமிஷன் அடிக்கடி கூடி ஒரு சமரசத்தை ஆலோசித்து வருவதும், ஜெருசலேம் [illegible] என்ன [illegible] லண்டன் டைம்ஸ் ஜெருசலம் நிருபர் கூறுகிறர்.

விற்பனையாளர் தேவை

கும்பகோணம்
கரூர்
பேட்டூர் அணை
நெல்லி குப்பம்
கோடைரோட்டு

விலாசம் 'மாலைமணி'

சேரி மக்கள் தாக்கப்பட்டனர்; குடிசைகள் தீக்கிரை

வாலாஜாபேட்டையில் ஜாதி இந்துக்கள் அட்டகாசம்

ராணிப்பேட்டை, ஏப் 9—

வாலாஜாபேட்டையிலிருந்து சுமார் 200 பேர் கத்தி, கம்பு, கற்களைக் கொண்டு அருகிலுள்ள சேரியில் வாழும் பழங்குடி மக்களை மிருகத்தனமாகத் தாக்கி, அவர்கள் வசித்து வந்தக் குடிசைகளுக்குத் தீ மூட்டி விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் ஏற்பட்ட கலவரத்தில் பலர் காயப்படுத்தப்பட்டார்களாம். போலீசார் வந்து நிலமையைச் சமாளித்துப்பின் பழங்குடி மக்களைப் பொருமையை இழக்காமலிருக்கும்படி கேட்டுக்கொண்டார்களாம்.

பொருமை இழந்து விட்டால் மட்டும் அவர்கள் என்ன செய்து விடப்போகிறார்கள்? ராமராஜ்யத்தில் இதைவிட அவர்களுக்கு வேறு என்ன கிடைக்கப்போகிறது.

சேரிகள் ஊர்களுடனும், ஊர்கள் அக்ரகாரங்களுடனும் ஒன்றாக வேண்டுமென்று காந்தியார் கூறினார். வேற்றுமை நீக்கி, ஹரிஜனங்களுடன் தோளோடு தோள் நின்று வேலை செய்தால்தான், கிடைத்த சுதந்திரம் பிழைக்குமென்று கூறினார்.

சேரிகள் இருந்து கொண்டுதான் வருகின்றன. சேரிமக்கள் ஊரில் வந்து வாழவும், இன்னும் முயலவில்லை. அப்படி இருந்தும் சேரி மக்கள் கத்தியும் கட்டையும் கொண்டு தாக்கப்படுகின்றனர். காரணம் என்னவாக இருக்குமென நினைக்கிறீர்கள்? சேரிவாழ்வோரில் ஒருவன் ஊரில் செருப்புடன் நடந்திருப்பான், ஊரிலுள்ள கோயிலில் என்ன அதிசயம் இருக்கிறதோ வென்று மாடு மேய்க்கும் சேரிப் பையன் [illegible] கிடை[illegible] பார்கள். ஜா[illegible]ப்பத்துக்கு ஆளாகிய பையன் நிலை குலைந்து சேரியில் ஒளிய முயன்றிருப்பான், அவனைக் காட்டிக்கொடுக்கச் சேரி மக்களில் யாரும் முன் வராததால் அவர்கள் எல்லோரும் தாக்கப்படுகிறார்கள். அவர்கள் குடிசைகள் தீக்கிரையாக்கப்படுகின்றன. இந்நிலை வாலாஜாபேட்டையில் மட்டுமல்ல, பல இடங்களில் நடந்து கொண்டே உள்ளன. ஆதரவற்ற மக்கள், அண்டிப்பிழைக்கும் மக்கள் பொறுமையுடன் தான் இருக்கிறார்கள். அரசியலார் அவர்களுக்குக் கொடுத்த பரிசு என்ன? விரல் விட்டுப் பார்க்கட்டும்!

"சேரி வாழும் மக்கள்தான் நாட்டின் பழங்குடிகள்; ஆடு மேய்த்து வந்த ஆரியருக்குப் பணிந்து போக மறுத்து ஒதுங்கி வாழ்ந்தவர்கள்; அவர்கள் தான் உயர்ந்தவர்கள்; அவர்களைத் தீண்டக் கூடாதென்றும், ஆரிய தேவதைகளுக்காக ஆக்கப்பட்ட ஆலயங்களில் நுழையக் கூடாதென்றும் கூறியவர்கள் ஆணவம்பிடித்த ஆரியர்; அவர் சொல் கேட்கக்கூடாது என்று பேசுகிறவர்களுக்கு வாய்ப்பூட்டு! எழுதுகிறவர்களுக்குக் கைப்பூட்டு! எனினும் பொருத்துக்கொண்டிருக்க வேண்டும் பழங்குடி மக்கள்.

எப்பொழுதான் 'விமோசனம்' தர இருக்கிறார்களோ, பொருமையுடன் இருக்கும்படி உபதேசம் செய்யும் அரசியலார்!

மிகப் பெரிய தீவிபத்து

நியூயார்க், ஏப் 9—

உலகிலேயே மிகவும் உயரமான கட்டிடம் என்று முன்பு கருதப்பட்ட 60 அடுக்கு மாடியுள்ள உலவொர்த் கட்டிடத்தில் 23-வது மாடியில் பெரும் தீவிபத்து ஏற்பட்டது. இதை மிகவும் பிரயாசைப்பட்டு தீயணைக்கும் படையினர் அணைத்தனர்.

1945-ல் விமானம் மோதி 102 அடுக்கு மாடியுள்ள கட்டிடம் தீவிபத்திற்குள்ளான பின், ஏற்பட்டுள்ள பெரும் தீ விபத்து இது தான் என்று சொல்லப்படுகிறது.

1953-ல் உலக யுத்தம் மூளும்?

லண்டன், ஏப். 9—

மூன்றாவது உலக யுத்தம் 1953-ல் ஆரம்பமாகும் என்று பிரமிட்டுகளை ஆராய்ச்சி செய்து வருவதில் ஆர்வம் கொண்ட டாக்டர் ஆடம் ரூதர்போர்டு கூறுகிறார்.

இந்த யுத்தத்தில் ரஷ்யா முக்ய பங்கெடுத்துக்கொள்ளும் என்றும், முடிவில் ஜெர்மனியைக் காட்டிலும் அதிகமாக நசுக்கப்பட்டு விடும் என்றும், பிரிட்டனும் அமெரிக்காவும் ஜயம் பெறும் என்றும் அவர் கூறுகிறார்.

தீப் பெட்டியால் விபத்து

பாரிஸ், ஏப். 9—

21 மாதக் குழந்தையொன்று நெருப்பு பெட்டி ஒன்றை வைத்துக்கொண்டு விளையாடுகையில் குச்சியைத் தீட்டி தீப்பற்றும்படி செய்துவிட்டது. இதனால் படுக்கை பற்றிக்கொண்டு குழந்தை தீப்புண்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது. இக் குழந்தை முடிவில் இறந்துவிட்டது.

இரத்த சோகை நோய்க்குப் புது மருந்து

கிளாஸ்கோ லேபரேடரியில் ஸ்தாபனத்தில் தலைமை ரசாயன நிபுணரான டாக்டர் இ. லெஸ்டர் ஸ்மித் அவர்கள் சுமார் பத்து வருடகாலமாக நடத்திவந்த ஆராய்ச்சிகளின் பலனாக முற்பட்ட ரத்த சோகை நோயைப் பூரணமாக குணப்படுத்துவதற்கான புது மருந்தொன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

முற்பட்ட ரத்த சோகை சாதாரண சோகை வியாதியைவிட முற்றிலும் மாறுபட்ட நோய் என்பது, சுமார் நூறுவருடங்களுக்கு முன்னர் தான் தாமஸ் அடிசன் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. இந்நோயைக் குணப்படுத்துவதற்கான முயற்சியில் அநேகம் பெயர் நிபுணர்களின் பெயர்களும் அடங்கியிருக்கின்றன. இதுநிமாகாவில் என்பவர்தான் முற்றிய ரத்த சோகை நோயுடலிலுள்ள அமிலக் கோளாறு காரணமாகவும், சத்துணவு இல்லாத குறையாலும் தான் ஏற்படுகிறதென்பதை ஆதாரங்களுடன் நிரூபித்தார். இந்நோயைப்பற்றியும், அதைக் குணப்படுத்துவதற்கான முறைகள் பற்றியும் 1920-ம் வருடம் ஆராய்ச்சி நடத்த ஆரம்பித்த விப்பிளும் அவருடைய சகாக்களும் ஒரு முக்கிய கண்டுபிடிப்பை—அதாவது நோயாளியின் உடலில் ஈரல் சேர்த்தினால் நோயின் வேகம் தணிந்துவருகிறதென்பதை—வெளியிட்டனர்.

விப்பிலின் கண்டுபிடிப்பை அடிப்படையாகக் கொண்டு 1926-ம் குட் இரு அமெரிக்க டாக்டர்கள் அதற்கான மருந்து தயாரிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். நாளொன்றுக்கு அரை ராத்தல் ஈரலே பயன்படுத்தப்பட்டதனால் நோயாளியின் தேகத்தில் ஆச்சர்யமான மாறுதல் காணப்படுகிறதென்பதை இவ்விரு டாக்டர்களும் கண்டனர். அத்துடன் நோயாளி தன் வாழ்நாள் முழுவதும் தவறாமல் இவ்வுணவை உட்கொண்டால் சோகை நோயை சுலபமாகத் தடுத்து நிறுத்தமுடியுமென்று இவர்கள் கூறினர்.

இந்து சட்ட திருத்த மசோதா ஆதரிப்பு

பெண்கள் மாநாடு

திராவிட முன்னேற்றக் கழகச் சார்பாக

12—4—50 புதன் மாலை 3-மணிக்கு

சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெறும்

தலைவர்:— மூவாலூர் இராமாமிர்தத்தம்மையார்

சிறப்பாளர்:- அலமேலுமங்கைத்தாயாரம்மாள் Ex. M.L.C.

வ. குழுத் தலைவர் :— டாக்டர். எஸ். தர்மாம்பாள்

சொற்பொழிவாளர்கள்:

பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார்,

வ. ப. தாமரைக்கண்ணி அம்மையார்,

ஜோதீஸ்வரி அம்மையார்

அலமேலு அப்பாத்துரை,

மாநாட்டு அமைப்பாளர்.

திராவிடத் தாய்மார்களே! மாணவிகளே!

திரண்டு வருக!!

சென்னை சர்க்கார் ஏற்பாடுகள்

கட்டாய இன்ஷூரன்ஸ் திட்டம்

சென்னை, ஏப். 7—

சென்னை சர்க்கார் உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கு இப்பொழுதிருக்கும் பென்ஷன் முறைக்கும் பதில், பென்ஷன் பிராவிடன்ட் நிதி, இன்ஷூரன்ஸ் திட்டம் இம்மூன்றும் அடங்கிய ஒரு முறை வ[illegible] ளிக்கவென்று சர்க்கா[illegible] செய்திருக்கிறது. இ[illegible] 1950 ஏப்ரல் தேதியிலிருந்து அமுல் நடத்தப்படும். ஆனால் 10 வருஷத்துக்கு அதிகமாய் சர்க்கார் சேவையிலிருப்பவர்கள் பழைய பென்ஷன் முறை வசதியையே அடைவார்கள்.

சர்க்கார் சிப்பந்திகளுக்கு ராஜ்ய இன்ஷூரன்ஸ் திட்டமொன்று அமைக்க வேண்டுமென்று சிலர், சிறிது காலமாக யோசனையை சர்க்கார் அனுமதிக்கவில்லை. அந்த யோசனையால் சர்க்கார் செலவு அதிகமாவதுடன் சிப்பந்திகளுக்கும் இதர பிரைவேட் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளை விட அதிக வசதி ஒன்றும் செய்துவிட முடியாதென்றும் சர்க்கார் கருதுகிறது.

ஆனால் இப்பொழுதிருக்கும் பென்ஷன் முறைக்குப் பதில் பென்ஷன், பிராவிடன்ட் நிதி, இன்ஷூரன்ஸ் திட்டம் முதலிய மூன்று வசதிகளையும் அளிக்க சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. இந்தப் புதுமுறை ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வரும். உயர்தர சர்க்கார் சிப்பந்திகளுக்கு மட்டுமே இந்தப் புதுமுறை செல்லுபடியாகும்.

புதிய முறை விவரம்

இந்தப் புதுமுறைப்படி பென்ஷன் இப்பொழுதிருக்கும் பென்ஷன் விகிதத்தில் பாதி கொடுக்கப்படும். அதாவது இப்பொழுது பாதி சம்பளம் பென்ஷன் கொடுக்கிறது. புது திட்டத்தின் பிரகாரம் பாதியில் பாதி (கால் சம்பளம்) பென்ஷனுக்குக் கொடுக்கப்படும். பென்ஷனில் குறைந்த அளவு பிராவிடன்ட் நிதி முறையிலும் இன்ஷூரன்ஸ் வசதியிலும் ஈடு செய்யப்படும்.

பிராவிடன்ட் நிதிக்குசர்க்கார் சிப்பந்தி தனது சம்பளத்தில் ரூபாய்க்கு ஒரு அணாவுக்கு குறையாமல் கட்டணம் செலுத்த வேண்டும். சர்க்கார் அத்துடன் ரூபாய்க்கு 9 தம்படி வீதம் கொடுக்கும்.

கட்டாய இன்ஷூரன்ஸ்

[illegible] இது தவிர புதுத்திட்டத்தின் [illegible]வரும் சிப்பந்திகள் தங்கள் ஆயுளை போஸ்டல் இன்ஷூரன்ஸ் இலாகாவிலாவது அல்லது வேறு பிரைவேட் இன்ஷூரன்ஸ் கம்பெனியிலாவது கட்டாயமாக இன்ஷூரன்ஸ் செய்யப்பட வேண்டும். ரூ 45-க்குக் குறைவாய் சம்பளம் வாங்குகிறவர்கள் ரூ 500-க்கும், ரூ 45 லிருந்து ரூ 90-வரை சம்பளம் வாங்குகிறவர்கள் 1000-க்கும், ரூ 90-க்கு மேல் ரூ. 150 வரை ரூ 2000-க்கும், ரூ. 150-க்கு மேல் ரூ. 250 வரை ரூ 3000-க்கும் ரூ. 250-க்கு அதிகம் வாங்குகிறவர்கள் ரூ 5000-க்கும் இன்ஷூரன்ஸ் செய்யவேண்டும். மேலே குறிப்பிட்ட சம்பள கட்டங்கள் மாதமொன்றுக்கு. அந்த சிப்பந்திக்கு வயது 40-க்குக் குறைவாயிருந்தால் இவர் அந்த சம்பள உயர்வுக்குத் தக்க அளவுக்கு இன்ஷூரன்ஸ் தொகையைப் அதிகப்படுத்திக் கொள்ளலாம். அந்த இன்ஷூரன்ஸுக்கு பிரீமியம் கட்ட, சிப்பந்தி பிராவிடன்ட் நிதிக்கு தாம் கட்டியிருக்கும் பணத்திலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

ஒவ்வொரு சிப்பந்தியும் தமது உத்தியோகத்தில் புதுவேலை காலத்தைச் சென்று விட்டார் என்றும், இனி வேலையினின்றும், விலக்கப்படமாட்டாரென்றும். மேலதிகாரிக்குத் திருப்தி பட்டதும், பிராவிடன்ட் நிதிக்கு பணம் கட்டுவது ஆரம்பிக்கப்படும்.

கீழ்த்தர சிப்பந்திகளுக்கு

இந்தப் புதுத் திட்டம் ஆரம்பமானதிலிருந்து பிராவிடன்ட் நிதி, இன்ஷூரன்ஸ் பென்ஷன் கம்யூடேஷன் முதலிய முறைகள் ரத்து செய்யப்படும்.

புதிதாய் நியமிக்கப்படும் சர்க்கார் உயர்தர சிப்பந்திகளுக்கு இந்தப் புதுத்திட்டம் செல்லுபடியாகும். 10 வருஷத்திற்கு குறைந்த சர்வீசிலுள்ள உயர்தர சிப்பந்திகள் விரும்பினால் இந்தப் புதுத் திட்டத்தில் சேர்ந்துகொள்ளப் பதிவு செய்து கொள்ளலாம். அதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

உயர்தர சிப்பந்திகளுக்கு இந்தத் திட்டத்தை நடத்தி அனுபவம் அடைந்த பிறகு கீழ்த்தர சிப்பந்திகளுக்கும், இதைப்போன்ற திட்டமொன்றைப் புகுத்துவது பற்றி கவனிக்கப்படும்.

புது திட்டத்தை அமுல்நடத்துவதற்கான விதிகளையும், சர்க்கார் வகுத்திருக்கிறது.

கரேன் கலகக்காரருடன் சமரச முயற்சி

பர்மாசர்க்கார் மீண்டும் பேச்சு நடத்துகிறது

ரங்கூன், ஏப். 6—

கரேன் கலகக்காரர்களுடன் சமரசம் செய்வதற்கான புது முயற்சியாக பர்மா சர்க்கார் மீண்டும் பேச்சுவார்த்தை துவக்கியிருக்கிறது. இன்று ஸ்தல பத்திரிகைகள் இத்தகவலை வெளியிட்டன.

பிரபல கரேன் தலைவர்களும், ராணுவ அபீசர்களும் கலகத் தலைவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முயலுவார்களென்றும் அப்பத்திரிகைகள் கூறின.

இளம் மாதர் கிறிஸ்தவ சங்கத்தின் தலைவரான தேசிய வீராமாவின் தலைமையில் பிரசாரக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அக்கமிட்டி விமானம் மூலம் கலகப் பிரதேசங்களில் துண்டுப் பிரசுரங்களைப் போடும்.

டவுங்கூ பிரதேசத்திலுள்ள இந்தியரைச் சந்திக்க இன்று இந்திய உப ஸ்தானிகர் அஹமீத் மன்சூர் டவுங்கூவுக்குப் புறப்பட்டார். டவுங்கூவில் வைசூரியும் இதர தொத்துவியாதிகளும் பரவியிருப்பதால், டவுங்கூவுக்கு இதுவரை ஏராளமான மருந்துகள் அனுப்பப்பட்டுள்ளன. இப்பொழுது பியு வரையில் டிரெயின்கள் ஓடுகின்றன. கூடிய சீக்கிரம் டவுங்கூவுக்கு வடக்கு வரையில் டிரெயின் போக்குவரத்து விஸ்தரிக்கப்படும்.

நாட்டு நடப்பு

சீர்திருத்த நாடகக்குழு

ஜோலார்பேட்டை, ஏப். 2—

சீர்திருத்த நாடகக் குழுவினரால் நடத்தப்பட்ட "சார் குற்றவாளி" என்னும் நாடகத்திற்குத் தோழர் அண்ணாத்துரை அவர்கள் தலைமை தாங்கி நாடகக் குழுவினரைப் பாராட்டிப் பேசினார்கள்.

நாடக முடிவில் டைமூர் வெற்றிச் செல்வி சிற்றுண்டி நிலைய உரிமையாளர் தோழர் கே. மாணிக்கம் அவர்களால் தி. மு. க. வளர்ச்சிக்காக தோழர் அண்ணாத்துரை அவர்களிடம் (101) நூற்றி ஓர் ரூபாய் கொண்ட பண முடிப்புக் கொடுக்கப்பட்டது. அன்று காலை குதிரை சவாரிப் போட்டி, இசைப் போட்டி முதலியவைகள் நடைபெற்றன. தோழர் வி. எஸ். குழந்தை அவர்களால் நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிது முடிவடைந்தது.

வள்ளுவர் வாலிபர் கழகம்

திண்டிவனம், ஏப். 2—

31—3—50 திடங்கல் சிங்காரத் தோப்பில் திருவள்ளுவர் வாலிபர் கழகத் துவக்கவிழா, தோழர் சாமிநாத முதலியார் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் இலவச வாசகசாலையைத் தோழர் வி. வைகாபுரி ஆசிரியர் திறந்து வைத்துப் பேசியபின், தோழர் ஆர். மூக்கிலான் பேசியபிறகு, நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது. பிறகு மாணவ, மாணவிகளுக்குத் தின்பண்டம் வழங்கப்பட்டது.

இரவு 7 மணிக்கு மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் பி. வி. சிவராமன் தலைமையின் கீழ் நடந்தது. அவ்வமயம் தமிழாசிரியர் தோழர்கள் எஸ். கோபாலகிருஷ்ணன் தோழர் எஸ். சோமு முதலியோர் வள்ளுவரைப் பற்றியும், இலவச வாசகசாலையைப் பற்றியும் பேசிய பின், மாணவ மாணவிகளால் நட்பின் மேன்மை என்ற சிறு நாடகம் நடித்துக்காட்டியபின் செயலாளர் நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது.

உப்புத் தொழிலாளர் சங்கம்

தூத்துக்குடி, மார்ச். 28—

26—3—50 மேலச்சண்முகபுரம் சங்க முன்பு அமைக்கப்பட்டிருந்த பந்தலில் டை கழக ஆண்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு தோழர் பி. எம். சண்முகம் தலைமைதாங்கி முன்னுரையாக தொழிலாளர்களின் நிலைபற்றி விசிவாகப் பேசினார். முதல் சங்க ஆண்டு அறிக்கையைத் தோழர் குழந்தைவேல் வாசித்தார். தொடர்ந்து தோழர்கள் எம். ரங்கநாதன், கே. வி. கே. சாமி. எம். வெங்கடகிருஷ்ணன், பி. ஏ. என். சொர்ணம் சொற்பொழிவாற்றினர். 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இறுதியாக சங்கத்தலைவர். தோழர் கே. வி. கே. சாமி நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

முத்தமிழ் வளர்ச்சிக்கழகம்

வடசேரிஜேயம், ஏப் 4—

2[?]—3—50 அன்று முத்தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் ஓர் அவசரச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் கழகத்தலைவர் தோழர் வி. கே. பழனிச்சாமிக்கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆண்டு கழக நாடகப்பகுதியின் சார்பில் தோழர் அண்ணாத்துரை அவர்களின் "வேலைக்காரி" நாடகத்தையும், தோழர் எஸ். டி. சுந்தரம் அவர்கள் எழுதிய 'கவியின் கனவு' நாடகத்தையும் பயின்று நடிக்க அனுமதிக்கோர எழுதத் தீர்மானிக்கப்பட்டது. தோழர் டி. கே. சண்முகம் தலைமையில் துவக்கப்பட்டுள்ள நாடகக்கழகத்தின் நற்பணி வெற்றியுற ஓர் பாராட்டு அனுப்ப முடிவு செய்யப்பட்டது. மற்றும் பல தீர்மானங்களுடன் கூட்டம் முடிவுற்றது.

தி. மா. விளையாட்டு மன்றம்

பொள்ளாச்சி, ஏப். 4—

தோழர் பெருமாள் அவர்களின் தலைமையின் 31—3—50 அன்று கீழ் தோழர் குழந்தை ராமின் இல்லத்தில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அது பொழுது திராவிட மாணவ விளையாட்டு மன்றம் நிறுவப்பட்டது. மன்றத்திற்கு தலைவராகத் தோழர் வெங்கோபராவ் உபதலைவர் ராமன், செயலாளர் சங்க மாணிக்கம், உதவிச் செயலாளர்-சோமசுந்தரம், பொருளாளர் வே. ஆறுமுகம் ஆகியோர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

விவசாயிகள் சங்கம்

திருப்பத்தூர், ஏப். 6—

இவ்வூர் தோழர் சங். கலெக்டர் அவர்கள் தலைமையில் விவசாயிகளுக்கும், சர்க்கார் பணியாளருக்கும் 5—4—50 அன்று ஓர் நன்றி அறிவிப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தாலுகா சங்க ஆபீஸர் விவசாயிகளை வரவேற்றார். தலைவர் முன்னுரைக்குப்பின், தோழர் வி. என். தத்தப்பன், கிராமங்களின் எழ்மை நிலைபற்றி விரிவான சொற்பொழிவாற்றினர். விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர், விவசாயிகள் அவ்வப்போது பயிர் செய்யவேண்டிய வினைகளைப்பற்றியும், கால்நடை அதிகாரி, கால்நடைகளை வளர்க்கவேண்டிய முறையைப்பற்றியும், கோ. ஆ. கூட்டுறவு சங்க அதிகாரி கூட்டுறவு சங்கத்தைப்பற்றியும், வனமண்டல அதிகாரி வனத்தின் அவசியத்தைப் பற்றியும் பேசினர். தலைவர் பின்னுரையில் அவரவர் பணிகளைச் செவ்வனே செய்ததற்காக அதிகாரிகளுக்குப் பரிசுகளும் நற்சாட்சிப்பத்திரங்களும் வழங்கி தாலுகா தாசில்தார் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

பீடித் தொழிலாளர் சங்கம்

பொள்ளாச்சி, ஏப். 3—

1—4—50 அன்று இரவு டை சங்கக் கட்டிடத்தில் தோழர் இராமநாதன் தலைமையில் நடைபெற்ற பீடித் தொழிலாளர் உறுப்பினர் கூட்டத்தில் 1951 ஆண்டிற்கு தோழர் பி. என். இராமானுசம் அவர்கள் தலைவராகவும், தோழர் கே. ஆர். இராமநாதன் அவர்கள் உதவித்தலைவராகவும், தோழர்கள் என். காதர்பாட்சா, நாச்சிமுத்து ஆகியோர்கள் செயலாளர்-துணைச் செயலாளர்களாகவும், தோழர் பு இ. இப்ராஹிம் அவர்கள் பொருளாளராகவும், 20 தோழர்கள் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

அரிஜன சேவா சங்கம்

இவ்வூரில் 1—3—50ல் ஹரிஜன சேவா சங்கம் சி. வி. மங்கலம், சி. எஸ். எம். பாடசாலை தலைமை ஆசிரியர் தோழர் அடைக்கலம் அவர்களின் தலைமையின் கீழ் தோற்றுவிக்கப்பட்டது. தோழர்கள் எ. பி. முத்தப்பா, எஸ். அழகு, ஆ. அடைக்கலம் ஆகியோர் அரிஜன முன்னேற்றத்தையும், கல்வி சம்பந்தமாக சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டுமென்பதையும் பற்றி ஆழ்ந்த விரிவுரையாற்றினர். பெண் கல்வி என்னும் பொருள் பற்றி தோழர் எஸ். அழகு பேசினார். தோழர் எஸ். பச்சக்கண்ணு நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

மாணவர் இலக்கிய மன்றம்

செம்பொன்னார்கோவில், ஏப். 4—

நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி "மாணவர் இலக்கிய மன்றம்" ஆண்டுவிழா 29—3—50 அன்று மாலை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அது பொழுது ரிலஹார் துணை கலெக்டர் ஆணையாளர் தோழர் டி. சீனிவாசன் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினர். மன்றச் செயலாளர்

பெல்ஜியத்தில் மீண்டும் பொதுத்தேர்தல்

ஏற்படுமென நம்பிக்கை

பிரஸ்ஸல்ஸ், ஏப். 9—

பெல்ஜியத்தில் புது சர்க்கார் அமைக்க முயன்று வரும் பால்வான் ஸீலண்டிற்குகடைசி நிமிடத்தில் புது முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ரீஜெண்டுடன் ஒரு மணி நேரம் இவர் பேசி முடித்த பின்பு நிருபர்களிடம் கூறுகையில், தான் சர்க்கார் அமைக்கத்தவறினால் பொதுத் தேர்தல் நடத்த வேண்டிய அத்யாவசியம் ஏற்பட்டுவிடும் என்று கூறினர்.

இவர் செவ்வாயன்று மீண்டும் ரீஜெண்டை சந்தித்துப் பேசவிருக்கிறார். கத்தோலிக்கர்கள் லிபரல்களின் ஒரு பகுதியினருடன் சேர்ந்து ஒத்துழைக்கவில்லை என்றால், ரீஜண்ட் பெல்ஜிய பார்லிமெண்டைக் கலைத்துவிடுவார் என்று தெரிகிறது.

மன்னர் லியோபால்டு பின்னர் முடிதுறக்க ஒப்புக்கொண்டால் ஒழிய, எந்த சர்க்காரையும் தங்களால் ஆதரிக்க முடியாது என்று லிபரல் கட்சியினர் தெரிவித்துவிட்டதாகத் தெரிகிறது. (ரூடர்)

ஜெக்கோஸ்லோவியாவுக்கு இந்தியத்தூதுவர்

பிரேக், ஏப். 6—

தோழர் என். ராகவன் இந்திய குடியரசின் முதல் தூதராக இன்று செக் ஜனாதிபதியிடம் தமது அத்தாட்சிப் பத்திரங்களைச் [illegible]த்தார்.

[illegible] தோழர் ஆ. சிதம்பரசாமியால் மன்ற நடவடிக்கை, மன்றம் செய்த தொண்டுகள் முதலியவை அடங்கிய ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது. மாணவ, மாணவிகளால் பலவித நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. அவைகளில் "நவீன சமதர்மம்" என்ற சீர்திருத்த நாடகப் பகுதியும் 'வேலைக்காரி' கோர்ட் சீனும் யாவர் மனமும் கவரும்படி நடத்தப்பட்டது.

அதுபொழுது. தோழர் சொ. இரா. விசுவநாதம் எம். ஏ. அவர்கள் 'மெய்யுணர்வு" என்னும் பொருள்பற்றி விரிவானதோர் சொற்பொழிவாற்றினர்.

அதன்பின் தலைவர் அவர்களால் பலவிதப் போட்டிகளிலும் கலந்து வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகளும், நன் மதிப்பிதழ்களும் வழங்கப்பட்டது. இறுதியாக தோழர்கள் ஆ. ஆரோக்கியசாமி, பி. எஸ். சி. ஆகியோரால் நன்றி கூறப்பட்டு, விழா இனிது முடிந்தது.

சொற்பயிற்சிக் கழகம்

குலூர், ஏப். 7—

6—4—50 அன்று கழகக் கட்டிடத்தில் தோழர் எஸ். ஏ. குப்புசாமி தலைமையில் 'திருமணமுறை' என்ற தலைப்பில் உறுப்பினர் பலர் பேசினர். கடைசியாகத் தோழர் எஸ். என். அருணாசலம் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

அறிவாலய நாடக மன்றம்

சக்கம்பட்டி, ஏப் 6—

இவ்வூர் தி. மு. கழகத்தின் ஆதரவில், 4—4—50 அன்று 'அறிவாலய நாடக சபா" நிறுவப்பட்டது. தோழர் மா. க. செல்வநாதனால் கதை, வசனம், பாட்டு அமைக்கப்பட்டுள்ள "ஏழை கண்ட காடு" எனும் நாடகம் நடிப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வூரில் இதை ஒவியே "ஏழை கண்ட காடு" என்று தெரியவருகிறது.

அறிக்கை

—(0)—

இந்து சட்டத் திருத்த மசோதா பற்றி பொது மக்களின் கருத்தை அறிய, ஏப்ரல் 14-ம் நாளன்று டில்லியில் மாநாடு ஒன்று கூட்டப் போவதாகத் தோழர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் அறிவிப்புச் செய்துள்ளதால், அதற்குள் அவர் கைக்கு போய்ச் சேருமாறு, திராவிட முன்னேற்றக் கிளைக் கழகங்கள் கீழ்கண்டபடி தந்தி தபால் மூலம் செய்திகளை அனுப்பி வைக்கக் கோருகிறேன்.

அனுப்பிவைக்கவேண்டிய செய்தி:—

Dravida Progressive Federation of............offers its wholehearted Support to the Hindu Code Bill. This Federation considers the Bill as the minimum effort at reorganisation of Hindu Society on Rational principles, and urges the government in general and Dr. Ambedkar in particular to legislate without delay or hesitation or modification the Hindu Code Bill and without paying any heed to the cooked up opposition of the orthodox elements and the reactionary groups.

செயலாளர்,
பிரசாரக் குழு-தி. மு. க.
தலைமை நிலையம் 5 4-50.

சர்வதேசத் தபால்தலை கண்காட்சி

பிரிட்டனிலுள்ள ஸ்டாம்பு சேகரிப்போர்களைப் பற்றி அதிகாரபூர்வமான புள்ளி விவரமெதுவும் கிடையாது என்றாலும், இவர்களின் தொகை லட்சத்திற்குமதிகமாகவே இருக்கும். அத்துடன் இவர்களில் சாதாரண பள்ளிக் குழந்தைகள் முதல் மன்னர் ஆறாம் ஜார்ஜ் மன்னர்வரை அடங்கி இருக்கின்றனர் முதன் முதலாக ஒட்டும் தபால் தலைகளைக் கண்டுபிடித்த நாட்டில் ஸ்டாம்பு சேகரிக்கும் ஆர்வம் இவ்வளவு அதிகமாகக் காணப்படுவது இயற்கையிலேயே நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தாது.

தபால்தலையின் 110-வது ஆண்டு விழாவைத்தான் பிரிட்டன் வரும் மே மாதம் ஒரு சர்வதேசத் தபால் தலை கண்காட்சி மூலம் கொண்டாடப்போகிறது. இக்கண்காட்சியில் 5 லட்சத்திற்குமதிகமான தபால் ஸ்டாம்புகள் இடம்பெற்றிருக்கும். மே மாதம் 6-ம் தேதியன்று ஆரம்பமாகவிருக்கும் இக்கண்காட்சி கடந்த 25 வருடங்களில் லண்டனில் சர்வதேசரீதியில் நடைபெறும் முதலாவது கண்காட்சியாகும். இக்கண்காட்சி அளிக்கவிருக்கும் தங்க மெடல் இரு பரிசுகளுக்கு உலக முழுவதிலுமுள்ள ஸ்டாம்பு சேகரிப்போர் போட்டியிடுவார்கள்.

மன்னர் சேகரித்து வந்துள்ள தபால் தலைகளும், இக்கண்காட்சியில் பிரமாதமாக காட்டப்படவிருக்கின்றன. இதில் அநேக விலை மதிப்பில்லாத ஸ்டாம்புகளும் அடங்கியிருக்கும். இவைகளைத் தவிர மன்னரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்ட தபால் தலைகளுக்கான சித்திரங்களும் இக்காட்சியில் இடம்பெறும்.

மன்னரின் தபால் தலைகளை பராமரித்துவரும் ஜான் வில்சன் என்பவர்தான் இக்கண்காட்சியின் தலைவர். இக்கண்காட்சியில் பிரிட்டிஷ் தபால் ஆபீஸின் வளர்ச்சியைக் காட்டும் அம்சங்களும் அடங்கியிருக்கும்,

பிரிட்டனில்தான் முதன் முதலாக ஒட்டும் தபால் தலை கண்டுபிடிக்கப்பட்டது. ஸர் ரோலண்ட் ஹில் என்பவர்தான் 1840-ம் வருடம் மே மாதம் 6-ந் தேதியன்று பென்னி தபால் தலைகளைப் புகுத்தினார். அதற்கு முன்புவரை தபால் கட்டணங்கள் 'டெலிவரி"யின் போது வசூலிக்கப்பட்டு வந்தது.

கெய்ஸரின் பேரன் மறைவு

கேப்டவுன், ஏப். 9—

கெய்ஸரின் பேரனை பிரஷ்யர் இளவரசருமான ஹியூபர்ட் தென் மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு ஆஸ்பத்திரியில் தன் 40 வது வயதில் காலமானார். வயிற்றில் செய்யப்பட்ட ஆபரேஷனுக்குப் பிறகு இவர் பிழைக்கவில்லையாம். —ரூடர்

இந்து சட்ட திருத்த மசோதா

இந்து சட்டத்திருத்த மசோதா ஆதரிப்புத் தீர்மானங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:—

Dr. B. R. AMBHEDKAR,
Law Minister,
Central Secretariat.
NEW DELHI.

[illegible] முன்னாள் அமைச்சர்

டோக்கியோ, ஏப். 9—

யுத்தக் கைதி என்று மதிக்கப்பட்டு சிறையில் இருந்து வரும் மாஜி ஜப்பானிய வெளிநாட்டு மந்திரி மெமோரு ஷிகெமிட்ஸு இன்னும் 2[?] தினங்களில் பரோலில் விடுவிக்கப்படுவார் என்று தெரிகிறது.

எந்த நிபந்தனைகளின் பேரில் இப்பொழுது அனுமதிக்கப்படுகிறது என்பது இன்னும் தெரியவில்லை.

ரஷ்யர்கள் வற்புறுத்தியதின் காரணமாகவே இவர் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டார் என்பது எல்லோரும் அறிந்த இரகசியமாகும்! (ரூடர்)

பிரிட்டனில் வேலை நிறுத்தம்

லண்டன், ஏப். 9—

மலேயாவுக்கு ஆயுத உதவி செய்வதைத் தடுக்க பிரிட்டிஷ் தொழிலாளர்களைச் சதி வேலையிலும் ஸ்டிரைக்கிலும் ஈடுபடச் செய்யும் முயற்சிகள் நடைபெறுகின்றன வென்பது பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு தெரியவந்திருக்கிறதாம். தொழிலாளர்கள் இவர்கள் பிரசாரத்திற்குட்படாமல் தடுக்க போதிய முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

கம்யூனிஸத்தை எதிர்த்து வந்த இடதுசாரி தீவிரவாதிகளைக் கொண்டே இத்தாண்டவம் நடத்த முயற்சி செய்யப்பட்டுவருகிறதாகக் கூறப்படுகிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street. Madras-1.